𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்
1வரு 2—12—0
6மீ 1—8—0
3மீ 0—14—0
1காபி - 0—2—6
இலங்கைக்கு
3—8—0.

௰௪-ம் இலக்கம்

பத்திரிகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯ வரு ஜனவரி௴ கடு௨இ சர்வதாரிவரு தைமீ௴ ச௨

விஞ்ஞாபநம்

தனவான்களே!!

இப்பொழுது நமதுப்ராம்மவித்தியாவுக்கு மூன்றாமாண்டுதுவக்கி 7-மாதங்களாகியும்' சவனியாமலிருப்பது நன்றன்று. தங்கள் கையில் நின்று பணம் வரத்தாமதப்படின் பத்தரிகை என்றும்தளராநடைபெற்றுவருவதெங்ஙனம்? ஆகையால் நண்பர்களே! இனித்தாமதியாது இவ்வருடத்தயசந்தாவையும் இதற்கு முன் பாக்கி யிருப்பவற்றையும் எமக்கனுப்பி விடுக.

விளம்பரம்.

பரமார்த்தும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா கல்க்கிரதி மூதல் இரண்டு வருடங்கள் வரையிலுள்ள பத்திரிகைகளைத் திரும்ப [illegible] சேர்க்கப்பட்ட புத்தகங்கள் [illegible] 50-இ விலைபெற்ற [illegible] யுள்ளன. [illegible] உள்ளன. [illegible] 1-க்கு 2—8—0 ஆக [illegible] புத்தகங்கள் 5 [illegible] பாங்கில் [illegible] 5—6—0 [illegible] போனால் வராது.

ப்ரம்மவித்தியா.

சர்வதாரிவரு தைமீ௴ ச௨ செவ்வாய்க்கிழமை

விக்கிரகாராதனம்

(முன்தொடர்பு)

ஐயா, முற்கூறிய காரணங்களால் அவர் ஆட்டம் அறிஞர் கூட்டத்தில் பயன்படா தொழிபென்றறிக. யாமுனனர் எடுத்தோதிய மந்திரங்களைப் பின்பற்றி அவற்றின் பொருளையே தப்பொருளாகக்கொண்டமந்திரங்கள் பலவுள. அவற்றில் சிலவற்றை இங்குவிளக்குவாம். '[illegible] ச் சந்தஸா மிருவஃபோவிசுவருபச்ச்ந்தோப்யோப்யம்ருதாத்ஸ [illegible] மேத்திரோமேதாயாஸ்பிருணோதுஅமிருதஸ்யதேவதாரணோபூயாசம்சரீரம்மேவிசர்ஷணம்'' என்பதும் அங்ஙனமே ''[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

[illegible] !!

[illegible]

[illegible]

[illegible] 'தவச்சிரியேமருதோமர் ஜயந்தருத்திரயத்தேஜன் [illegible] மசாருசித்திரம்' என்பதும் [illegible] திருஸஉடர்ணமயாசிதம்பிராமணுயத [illegible] யாத்,, என்ப[illegible] என்றறிக. இனியுபரிடதங்களில் இவ்விஷ[illegible]யத்தைக்குறிக்கும் [illegible]ந்திரங்கள் பலவுளவேனும் அவைகளை எண[illegible] விரிவஞ்சியேவிடுத்தோம். நமது பூர்வபக்ஷியார் அவ்வச[illegible]னங்களை நமபார்? சங்கிதாவசனங்களையே நம்புவாரொன்று கரு[illegible]தி அவர் நோக்கத்திற்கியைந்து இங்ஙனம் கூறினேமில்லை: ஏனெனில், மேற்[illegible]சைப்பாதிரிமார் இங்குவந்து சந்து பொந்து[illegible]களிற்புகுந்துபதே சித்துவந்த ஆப்ரசக்கிறிஸ்து மதநூலாய விவி[illegible]லியநூலிற்கண்ட சித்தாந்தத்தைக் கைபிடித்துத், தொன்று[illegible]தொட்டு ஆரியர் அனுட்டித்துவந்த வைதிக கனமமாய விக்கி[illegible]ரகாராதனத்தை எவ்விதத்திலு மறையச்செய்யக் கங்கணம் பூ[illegible]ண்டேதிரியும் இவர்கள் கருத்தை யாம் செவ்வனேயறிந்[illegible]திருக்கிறேம். இவர் சங்கிதையே பிரமாணமென்றும், உபநி[illegible]தங்கள் அங்ஙனம் அல்லவென்றும் எடுத்துக்காட்ட யுக்திகள் [illegible] எட்டுணையேனுஞ் சொன்னாரில்லை; சொல்லமாட்டுபவருமல்ல. அவ்விதயுக்திகள் மனம்பெறுதென்பதும் துணிபே. "வொ[illegible]ப்பிச்சமாதானமளித்தல்'' என்னும் நியாயத்தைக்கொண்டு அவர்கொண்ட வழிநின்று சமாதானமளித்தோமென்றறிக. [illegible]முன்னெடுத்த மந்திரங்களின் பொருள்களைக் கிரமமாக வெடுத்[illegible]ளக்கப்புகுவாம். அதில் முதல்மந்திரத்தின் பொருளிது: ய[illegible]ந்தபரமான்மா [illegible] சர்வரூபங்களையும்பெற்றவன் [illegible]வது தொண்டர் பாவனைகளுக் கியைந்த சரீரத்தைப் பெற்[illegible]ன். அவன் முற்றிலும் ரூபமில்லாதவனுமல்லன்; தமக்கெ[illegible]னும் ஓர் சரீரத்தைக்குறிப்பாகப்பெற்றவனுமல்லன் என்பதுக[illegible]து) [illegible] வேதங்களுக்குத்தலைவன் [ப்ரம்மத்[illegible]திற்கதிபதி என்பதாதி வேதவாக்கியங்களால் அங்ஙனமெடுத்[illegible]தாதப்பட்டவனென்பதுகருத்து. [illegible] தொண்ட[illegible]ர்களுக்கு முத்தியளித்தற் பொருட்டு [illegible] வேதவசனங்களாற் பலவுருவம்பெற்றவனுகக்கூறப்பட்[illegible]வன். [illegible] அப்பரமேசுரன் [இந்திரன் என்பது பரமே[illegible]சுரன் எனப் பொருள்படும்] [illegible] 'இந்த்' [illegible] முற்றப் பகுதி அப்பெ ருள் பெற்ற[illegible]க. அங்ஙனமே [illegible]த்திராஜ்யேஷ்டாநி எனுதொடக்[illegible]ருச்குவேதமந்திரத்திலும் உபயோகமுமிருக்கின்றது] [illegible] எனக்கு நல்லறிவைப்புகட்டுவோனுக. [illegible]

[illegible] என்றதின் கருத்துவருமாறு:— [illegible] அமிருதன் என்னுஞ்சிவனுடைய ஸ்ரீஜாபலோபநிடதத்தில் ஸ்ரீருத்திரசங்கியைப்பற்றிச் சொல்லுமிடத்து" இவை அமிருதன் திருநாமங்கள்,, "இவைகளை ஓதில் அமிருதனே யாவனென்றும், 'அமிருத'னென்னும் அரும்பதத்தை ஸ்ரீசிவபிரானிடம்பிரயோகித்தலால் என்றறிக] [illegible] லிங்கத்தைப்பூஜிப்பவனுக- [illegible] ஆகக்கடவேன்- [தேவ என்பது விளையாட்டைக்குறிக்கும் திவ் என்னும் வினைமுற்றப்பகுதியிற்பிறந்து விளையாட்டினிடத்தைக்குறிப்பதாகப் பிரகரணபலத்தால் கடவுளெழுந்தருளுமிடத்தை அதாவது லிங்கத்தைக குறித்து நின்றதிங்கு] வேறுவிதமபொருள் கொள்ளின், அவா

[illegible]

நிலையற்றஜன்றுடனென்று பொருட்பொருத்தமெய்தாமையாலென்க] இதனால் நித்தியம் சிவபூஜை செய்வோம் என்றபிரார்த்திக்கலாயிற்று. ஆதலால் ஸ்ரீரம்மே விசர்ஷணம் எனது சரீரம் பரவசமற்றதாகவேண்டுமே,, என்பதுமே. இவ்விதங்கூறியபின் "ப்ரஹ்மண: கோசோஸி மேதயா பிஹித:,, என்றிருப்பதாலும் "இது பரமாத்மாவுக்குப்புத்தியாற்கற்பிக்கப்பட்டஸ்தானம்" என்று பொருள்படுதலாலும், இம்மந்திரம்பிம்பாராதனையைக்குறிக்குமென்பதில் எட்டுணையுமையமின்று. யாமிங்கெடுத்துக்காட்டிய வியாக்கியானம் ஆராதிப்பதெனவழங்கப்படும் ஓர் சார்பினர் குருவாய 'சோமநாதாதியர்' முதலாயினோர் ஒப்பியதாயினும், மற்றவர்க்குமது விரோதமின்மையால் எடுத்தோமென்றறியற்பாலது. இனி இரண்டாவது மந்திரத்திற்குரையாடுவாம்: ஹோதாஜு ஓ சவமாண!! யதேஜநிஷ்ட நீ ஆவிர்ப்பவிக்குமிடமெது? [ஜனி என்பது ஆவிர்ப்பவிக்கும்ஸ்தானமெனப்பொருளீந்து ஆவிர்ப்பாவத்தைப்பொருளாய்க்கொண்ட ஜன் என்னும் வடமொழிப் பகுதியாற்பிறந்த சொல்] அது "சாருவித்ரம்" அழகியதும் அற்புதமானதும் [அதாவது லிங்கரூபமானது ரூபமுள்ளதுமல்ல; கைகால் முதலிய அவயவமமைப்பின்மையின், ரூபமற்றதுமல்ல; புலன்களுக்குவிஷயமாவதலால் லிங்கபுராணஞ் சாற்றுகின்றது. 'உலகெலாங்கடந்துருவமற்ற உயர்கடவுளுக்குஅநுரூபமே லிங்கமென்பது,, என்று] அதை- ஸ்ரியோ ரமாகாங்க்ஷயா ஐசுவரியம்பெறுகவேண்டி தேவதைகள் பூஜித்தார்கள் என்பது. இதனால் பிம்பபூஜை குறிக்கப்பட்டதுகாண்க. இனி மூன்றுமந்திரம் திருஸுபர்ணம் என்னும் வில்வித்தை [அதாவது மூன்று இதழ்களைப்பெற்றமையால் திரு-ஸுபர்ணமெனப்பட்டது] பிராமணன் என்னும் சிவனுக்குக்கொடுப்பாயாக,, எனப்பொருள் படுகின்றது,, ["தேவர்களுக்குள் பிராமணன்,, என்றுசாமவேதத்தில்பிரபதமென்னுமிடமிருப்பதாலும்" பிராமணர்களுக்கதிபதி,, என்றுயஜுர்வேதம் சாற்றுதலாலுமெனக]

இனியாமெடுத்துக்காட்டிய மந்திரவியாக்கியானங்களெல்லாம் சிவபூஜையைப்பற்றினவையேயன்றி வேறுதெய்வங்களை ஆராதிக்கவிடங்கொடுக்கவில்லை. ஏனெனில், ஆரியர்களுள் எல்லாவைதிகர்களுக்கும் சம்மதமானது பிம்பத்தின்கண்கடவுளை ஆராதித்தல் என்பதற்குமாத்திரம் இவைகளையெடுத்துக்காட்டினோமேயன்றி, ஸ்ரீமந் நாராயணாதிகளை ஆராதித்தல் அவைதிகமல்லவென்பதே எமதுகருத்து. நிற்க; முன்னர் யாமெடுத்துக்காட்டியபடி கடவுள் அக்கினிமுதலியபலவஸ்துக்களின் கண்ணாராதிக்கப் படுவாராகையால், அவ்வவ்விடங்களில் பூஜிக்கவேண்டிய அதிகாரிகள் யாவர்? என நிகழும் வினாவை ஸ்ரீகிருஷ்ணபிரான் தமது திவ்ய கீதாசாஸ்திரத்தில் விளக்கி அதற்கு விடைபகர்ந்தவிவரம் வருமாறுகாண்க:— "க்ஷேத்ரே திஷ்டதி விப்ராணாம் ஹ்ருதி திஷ்டதி யோகினாம்' ப்ரதிமாஸ்வப்ரபுத்தானாம் ஸர்வத்ர விதிதாத்மனாம் அக்னௌ திஷ்டதி விப்ராணாம் ஹ்ருதி திஷ்டதி யோகினாம் பிரதிமாச்வப்பிரபுத்தானாம் சர்வத்திரவிதிதாத்மனாம்,, என்று இங்குஅப்பிராயித்தாள் என்பதால் அப்பதப்பொருளுள்ளார் முமுக்ஷுகள் கூறப்பட்டுள்ளவரேயன்றி மதியீனர்களல்ல. ஏனெனில் பிரபுத்தரல்லாதவர் என்றால் அவரைப்போன்றவரென்னும்பொருள் அதனுள்ளடங்கியது. மாபாடியத்தில் "வேற்றுமையாயினும்போலித்

[illegible]

தன்மையாயினும் கூறுஞ்சொல்லுடன்கூடின் மற்றையசொல்லும் அத்தன்மைபோன்றதன்மையுள்ளதைச்சொல்லும்,, என்றிருப்பதைக்காண்க. ஆகலாற்றான் அடுத்தவசனத்தில் "அறிஞர்களுக்கெங்குமுள்ளவன்,, என்றமுத்திபெற்றவர் அல்லது ஞானூலறிவுபெற்றவர் அறிஞர் என வழக்கப்பட்டார்கள். 'எங்கும்' எனபதின் பொருள் 'அக்கினி இருதயம் பிம்பம்,, இவைகளே. யாங்ஙனமெனின், இலக்கணநூல்களைக்கசடறக்கற்றவர் கூற்றிது. 'சுட்டுச்சொற்கள் [சர்வநாமங்கள் என்று அவைகளைவடநூலார்வழக்குவது] முன்னிகழ்ந்த சொற்பொருட்களைத்தழுவிநிற்குமேன்பது. அங்ஙனமாயின் இங்கு 'எங்கும்' என்னுஞ்சொல்லும் இடங்களையடிக்கடி காட்டுவதாயின் அது முன்வாக்கியத்துடன் கூறப்பட்டுள்ளவையே தழுவிநிற்குமென்பதுண்மை. உதாரணமாக:—சாத்தன் கரியநிறமுள்ளான்; கொற்றன வெண்ணிறமுள்ளான்; மித்திரன்செந்நிறம்பெற்றவன்; எல்லேருஞ் சூத்திரர்கள் என்றால், 'இவ்வெல்லோரும்' என்னுஞ்சொல் உலகத்திலுள்ள எல்லோரையும் குறிக்காது முற்கூறிய மூவரையே சுட்டுகின்றது. அங்ஙனமே இவிடத்தில் முன் மூன்றுபாதங்களில் ஒவ்வோர் அதிகாரிக்கு ஒவ்வோரிடம் இருப்பவனுகக் குறிக்கப்பட்டவன். ஓர்விதவதிகாரிக்கு'எங்கும் இருப்பான'என்றால் முன் மூவ்வதிகாரிகளுக்கும் தனித்தனி ஒவ்வொருவிடத்திற் றேன்றியவன் உயர்ந்தவோர் அதிகாரிக்கு அம்மூவிடங்களிலும் தோன்றுவானென்றே பொருள்படும். ஆகலாற்றான் நந்தேயத்தாரியர்கள் அக்கினி இருதயம்; கன்முதலிய பிம்பங்கள் இவைகளுக்குள் எல்லாவற்றிலும் கடவுள் வணக்கம் செய்யும்வழக்கத்தைப்பெற்றிருக்கிறார்கள். இங்ஙனமிருக்க இக்கீதாவசனத்தை விக்கிரகாராதனத்திற்கு விரோதமாகப்பொருள்படுத்திய மற்றவர் கூற்று மணம்பெறாது. ஆதலால் கன்முதலியவிடங்களில் கடவுளை வழிபடுதல் வைதிகமென்பது எட்டுணையுமெக்காலத்துமறுக்கப்படாது. முற்கூறிய கீதாவசனத்தை உற்றுநோக்கில் அதுவும் விக்கிரகாராதனத்தையேசாற்றுகின்றது. எவ்விதமெனில், அந்தணர்க்கக்கினியின் கண்ணுள்ளான்,, என்பதால் எங்கும் நிறைந்த பொருளை ஓரிடமொடுக்கித்தியானித்தலை விதித்தவவ்வடிநிச்சியமாய் அக்கினி என்னும்பிம்பத்தின் கண்ணே கடவுளை வழிபடவத்தேசித்தது. ஆகலாற்றான் புராணத்தில் "யான் அக்கினியின்கண்ணுதிப்பேண,, என்றிருக்கின்றது. "யோகிகளுக்குத்திருவுளத்தில் குடிகொள்வான்,, என்னும் இரண்டாவது அடியால் ஸ்ரீயோக்யாக்கியவல்கிய கீதைமுதலிய யோகசாஸ்திரங்களில் பிராணுயாமப்பிரகரணங்களில் ஸ்ரீமன் நாராயணனுக்கிடமாகக் குறிக்கப்பட்ட இருதயம் என்னும் தானம் குறிக்கப்படுதலால் அதுவுமுற்கூறிய வழிநின்று இருதயபிம்பத்திற்கடவுள் வழிபாட்டை விதிக்கின்றது. இவ்விதம் மற்றையவடிகளையும்பொருட்படுத்துக. மேலும் [illegible] திரியம்பகம்யஜாமஹே "ஹவிஷமந்தோநமஸாவிதேமதே,, நமஸ்தே அஸ்துருத்திரரூபப்ய ஓ "யத்தேகல்யாணதம்ரூபம் தத்தேப்ச்யாமி "மசேசூராய விஷ்ணவே சார்கதா,, என்றதொடங்கிய பரபல மந்திரங்கள் இப்பூஜையைக் குறிக்கின்றன. இம்மந்திரங்களில் "பூஜைசெயல்வேண்டும்,, என்றுநேரில் குறிக்கப்படவில்லை

[illegible]

யயினும், முதல் மந்திரத்தில் பூஜை செய்தலை உட்பொருளாகக் கொண்ட யஜ என்னும் தாதுவினை பிரயோகித்திருத்தலாலும், இரண்டாவதில் "ஹவிஸ" என்னும் விபக்தியத்துடன் "உம்மை வணங்குவான்" என்று காணப்படுதலாலும், மற்றைய இரண்டு மந்திரங்களில் ரூபமுள்ள கடவுளின் பிம்பத்திற்கு நமஸ்காரம் பார்வைமுதலியவை கூறப்பட்டமையாலும், மற்றைய மந்திரம் நேரில் பூஜிக்கத்தப்பதாலும் அறிஞர் இம்மந்திரங்கள் இவ்விஷயத்தைக்காட்டவெழுந்தனவே அல்லவோ வென்று பயங்கா. ஆகையால் மாபாடியத்தில் ஸ்ரீபதஞ்சலியார் முனிவர் "ஜீவிகார்த்தேசாபண்யே" என்னும் பாணினியார் சூத்திரத்திற்கு உரைசெய்யும்பொழுது; "சிவன், கந்தன், விசாகன்" என்று மூன்று சொற்களை உதாரணமாகக்காட்டி உடனே "இச்சொற்கள் எவ்வித பிம்பங்களைக்குறிக்கின்றன" என்று ஓர்வினவையெழுப்பியபொழுது, "பூஜைக்காகவுள்ள பிம்பங்களைக் குறிக்குஞ்சொற்களே இவை" எனவுரைத்தாரென்க. இதனால் ஆசிரியர் பதஞ்சலியார் இப்பிம்பபூஜை உண்டென்பதை உணர்ந்திருந்தனர் என்பது பசுமரத்தாணிபோலிற்று. இனி முடிந்ததை முடித்தல் யாதெனில் 'பிம்பாராதனம் வைதிகம்' என்பதே. ஆதலாற்கொண்டே ஸ்ரீமாபாரதஸ்மிருதிகள் இவையெல்லாம் ஒருவாயாய் பிம்பாராதனத்தைவிதிக்கின்றன.

நிற்க; இங்கு சிலர் கருதுவது யாதெனில், "சககால்முதலிய உருவங்கள் அமைந்த பிம்பங்களைப்பூஜித்தலினும் அவ்விதவகைப்பற்றும் தொழிற்படாது தானேயுர்ப்பட்டவித்தமான பாணலிங்கம் சாளக்கிராமமுதலியவற்றில் கடவுள் வழிபாடுமிகச்சிலாக்கியம். அதுவே அநுபாமேசுவரத்தியானத்திற்கு நேரான சாதனம். அதுவிஷயத்தில் பிரமாணங்கள்பலவுள" என்பது. அது இக்கூழம் விவாதத்தில் அகப்படாததும் சம்மந்தமில்லாததுமாகையால் விடப்பட்டது. அதுகொண்டே ஸ்ரீபகவத்பாதாசாரியசுவாமிகள் ஸ்ரீசந்திரமௌளீசுவரர் முதலிய பிம்பங்களையும் மற்றைய அநேகவைதிகசமயாசாரியர்கள் அநேக பிம்பங்களையும் பூசித்தார்களென்பது அவரவர்சரித்திரங்களுள் காணப்படுகின்றன. தம செய்கையைக்கண்டு மற்றவரும் அவ்வாறனுட்டித்து நற்கதி பெறவேண்டுமென்றே மேம்பாடடைந்த யோகிகள் தாம் நேரில் கன்மங்களைச்செய்வது. அவ்வாசிரியமணிகளே பிம்பாராதனஞ்செய்தது நம்போலியர் அவ்வழி நிற்றற்பொருட்டே. ஆதலாற்றியே ஸ்ரீமான் வாசுதேவன் தாம் செய்த சிவாராதனம் உலகத்தார்க்கோர் உபதேசமென்று "நான்செய்ததை உலகஞ்செய்யும்" என்னும் வசனத்தால் விளக்கினர். விரிக்கிற்பெருகும். இனிமூன்றாங்கேள்வி

கடவுள்.

தொடர்பு.

இனி ஒன்பதாங்கேள்வி: அது "புருஷனுக்காதோ" என்பது. இதன்கருத்திது: உலகத்திலுண்டாகும் பொருளொவ்வொன்றும் ஒவ்வொருகருத்தாவானபுருஷனை அதிட்டிக்கவுண்டாகின்றது. அங்ஙனமாயின் காரியங்களுக்குப்பொதுவில் கருத்தா அவனே எனல் ஏன் அமையா? நியாயநூலாரும் அங்ஙனமே கொண்டார்கள். "எச்சிறப்பிற்கு எச்சிறப்பு காரியமோ

[illegible]

அப்பொதுவக்கும் அ பொதுவே காரணகாரியம்,, என்று. உலகத்தில் ஓர்குடத்தைக்குயவன் செய்ப யாம் கண்டபின்னர் அக்குடத்திற்சக்குயவன் கருத்தாவென்றுஅறிய நம்மனுபவத்தால் 'பொதுவாய்க்குயவன் பொதுவாய்க்குடங்களுக்குக் கருத்தா, என்பது சொல்லாதமையுமல்லவா? அங்ஙனமேவ்வொருகாரியங்களுக்கும் கருத்தாஜீவனுகையால், பொதுக்கருத்தாவும் அவனைய வதிற்றடையாதுளது? இதற்குச்சமாதானமிது: உலகத்திலோரிடக்காரண காரியங்களைக்கண்டால் அங்குஅவவிரண்டும் எத்தன்மைச்சம்பந்தம்பெற்றெனவோ அதே எங்குமுண்டென்பது மட்டில் அறியலாமேயன்றி எவ்விதக்கருத்தா எவ்விதக்காரியத்தை ஆக்கினனோ அவ்விதமே கருத்தா அககாரியப்பொதுவுக்கெனல் பொருந்தாது. எங்ஙனமெனில், உலகத்தில ஓரிடங்கரியவனும் நெட்டையுமான குயவன் கரிய நிறமுடைய குடத்தை உண்டாக்கக்கண்டதுகொண்டு "எங்கும் கருங்குடம் பொதுவாக்கருங்குயவனுமற்றன் உண்டாக்கப்படும்,, என்றுகொள்ளற்பாலதோ? இனி குயவன் குடத்தை வனைவான் என்பதே அதனுலேற்படுமாகையால், அதே நியாயத்தால்காரியம்பொதுவாய்ச்சேதனனைய கருத்தாவாலமையுமென்பது மட்டில் ஏற்படினும் அவன் ஜீவனென்று சிறப்பாகக்கூறுதலமையாது. முன்னில்லாதுண்டானமையால் காரணத்தை அவாவிய பூமண்டலமுதலிய காரியங்களுக்குக் கருத்தர் வேண்டில், யாம் காணக்கூடாத சேதனுகிய கடவுளே அங்கமைவார் என்றறிக. ஆகையாலுலகத்தில் யாம் கண்டசிலவற்றிற்குப் புருடன் காரணமாயினும், எல்லாவற்றிற்கும் அவனே காரணமெனலமையாது. ஆகையால், உலகத்திற்குக்காரணம் கடவுளே. இனி வினையவினுக்களையும்பற்றி ஆராயவாம். "உலகம் காரியமாயின் ஏன் ஓர் சரீரத்தாலமைந்திலது?,, என்பது அடுத்தவினு. இஃதின் கருத்திது. "யாம்காணும் காரியமெல்லாம் ஒவ்வொருசரீரத்தால் அமைப்பார்ப்பதால் உலகம் காரியமாயின் அதற்குக்காரணசரீரமொன்றுவேண்டும். அஃதின்மையால் அதுகாரியமன்று,,என்பதும். இனி உலகங்காரியமெனினும் அதுவிசித்திரகாரியம். விசித்திரகாரியம் பலகருத்தாக்களைக் கொண்டுமுடியும். அநேகர் கூடிச்செய்தமேடை, மாளிகை முதலியகாரியங்களை மட்டில் விசித்திரமாகக் காண்கின்றோமன்றி அவ்விதமில்லாத ஒருகுயவன் செய்தகுடத்தை அவ்விதங்கண்டோமில்லை. மாளிகையிலோ! தச்சன், கருமான், கொற்றன்முதலிய பலகருத்தாக்கள் சேர்ந்தமைப்பதை யாம்பார்க்கிறோம். ஆகலின், உலகம் என்னுங்காரியம் அநேகவிதமாகையால் அநேக கருத்தாக்கள் வேண்டும். அங்ஙனமாயின் அவர் எல்லோரும் கடவுளராகார். ஆனல் ஜீவர்களேயாவர். ஆயின் சேதனுசேதன் உலகத்தில் அசேதனும்சம் காரியம்; சேதனர் ஆக்குவோர்; எனவேற்படும். கடவுளொருவர் சித்திக்கார். இவர்களுக்கு ஆன்றோரளிக்கும்விடைகளைப்பின்வருமாறுகாண்க;—

உலகத்திற்காரியமெல்லாம் ஒவ்வொருசரீரத்தால் உண்டாகும் என்பது நியமமில்லை. வாயுவின் வேகத்தால் கூடுமணல்மேடு முதலியனகாண்டலால் சரீரமின்றி வேலைமுடியப்பார்க்கலாம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சொப்பனத்தில் சரீ மிகைகிருக்க வெளியிற் லகாரியம் காண்டலானுமென்க. இனி உலககர்த்தர் அநேகமென்பதுமொவ்வாது. ஏனெனில், ஓரேகர்த்தா விசித்திரகாரியத்தைச்செய்வாரில்லையென்பது ஓர்வியத்தியாகுமோ? உலகத்திலநேகவிதாழிலகளை அறிந்து பலவிதசுத்திரவேலைசெய்யும் புத்திமான்களை யாம்பார்த்ததில்லையா? இனி உலகத்தைப்படைப்பவர் அநேகர் என்பதும் அமையாது. சூரியன் முதலிய நவக்கிரகங்கள், ராசிகள் இவைகளொரோசக்தியால் அமைந்தனவென்று முன்னமேயெடுத்துக்காட்டினேமல்லவா? ஒவ்வொருசக்தியைப்பெற்றவொருவனை உயர் கடவுளென்று ஏற்படி . இனியாம் கண்ட அண்டங்களை ஒழித்து மற்றவர்களுக்கு ஒவ்வொரு கர்த்தாக்கள் வேறிருப்பார்கள். ஏனென்றால, இதிலெ க்கு விரோதமுமில்லை; வெறுப்புமில்லை. யாம்கண்டமட்டில் கடவுளொன்றே உண்டெனபதுணமை. ஆராயங்கால் மாளிகைமுதலியவைகளுக்கும கருத்தாவொருவனே. யாங்ஙனமெனில், ஓர்மனிதன தன்புத்தியில் தோன்றியவாறு விதவமைப்புக்குத் தக்கபடி அங்கங்களை மற்றவரால் செய்வித்து அவைகளைச்சேர்த்து முடிக்கிறான். அவனுக்கடங்கி அவ்வவ்வங்கங்களைச்செய்த பத்திதிதுணைக்காரணங்களாக மற்றவராவாரனறி நிமித்தகாரணமாகார். இவ்விடயம் ஓர் புதிய யந்திரத்தைச்செய்யுமிடத்தினன்குவிளங்கும். பாருங்கள்! ஓர் புத்திமான் தனித்துத் தன் புத்தி வலிமையால் ஓர் யந்திர வமைப்பைத் தியானிக்கிறான். பிறகு அதைமுடிக்கவேண்டி கருமான் முதலியவர்களுக்கு "இவ்வளவு பரிமாணத்திற்குள் சக்கரம் இவ்வளவு நீண்ட உருவங்கள் செய்துகொடு„ என்று கட்டளையிட, அவன் அவ்விதமே செய்துமுடிக்க அவைகளைச் சேர்த்து யந்திரமாக ஆக்கிவைப்பான். இவ்வாறாயின் கருத்தா அப்புத்திமானேயன்றி மற்றகருமான்முதலியவர் அல்லவென்பது தெற்றெனப்புலப்படும். ஆகையால் உலகம் விசித்திரகாரியமாயினும அவற்றைச்சிறிது சிறிதாக ஆக்குபவர் ஜீவர்களாயினும் பொதுகருத்தா கடவுளே என்பதுகண்மேலெழுத்தெனக்கொள்க. இனி அணுகாரணவாதிகளின் அபிப்பிராயத்தை விரித்துப்பின்மறுப்பாம்.

வரும்.

வியாகரணம்.

(முன்றொடர்ப்பு)

அக்கிரந்தக்காரருள் பிரசித்திபெற்றவர் ஸ்ரீகாசிகாவிருத்திக்காரர். அவர் முதலில் சூத்திரங்களுக்குத்தெள்பொருள விளக்கும் சுருங்கிய விருத்தியுரை ஒன்றுஎழுதினர். அது அநேக பண்டிதர் கொண்டாடப்படும்பெற்றது. முன் முநிகள் வியாகரணமெழுதியதுபோல இவருமநேக புதுலக்ஷியங்களுக்கிலக்கணமுரைத்தார். பின்வந்த "பட்டோஜிதீக்ஷிதர் அவர்கள்முதலிய அறிஞர்கள் அவர்சொல்லியதில் சிலவற்றை ஒப்பியும் சிலவற்றை யொதுக்கியுமிருக்கின்றார்கள். அவ்விருத்தியுரை அதிகசுருக்கமுமல்ல; அதிகவிரிவுமல்ல. படிப்பவர்க

[illegible]

ளுக்கு அதே மிக சுலபம். பின்பிறந்த "ஆசிரிய பட்டோஜியா எழுதிய "சித்தாந்தகௌமுதி,, முதலிய கிரந்தங்களிற் காணப்படுகின்றன. இதே விருத்திககாரர் "தொல்லாசிரியர் வாமநாராயணர்,, திருவாய் மலர்ந்தருளிய யோகபாஷியத்திற்கு ஓர் வார்த்திகஞ் செய்தார் என்று இத்தேயத்து அறிஞர்கூற்று. அவரெழுதிய விருத்தி வெகுகாலம் இவ்விந்து தேசத்தில் வியாகரணப்பியாசிகளால் படிக்கப்பட்டுவந்தது. அவ்விதமக்காலத்துப்பண்டிதர்கள் அதை மும்முனிகள் வசனங்களைப்போலவே கையாடிவந்தார்கள். இவ்விருத்திக்காரர் பிறந்தவிடம் பெயர் முதலியவை மட்டிற்புலப்படவில்லை. ஆயினும் வடநாட்டார் இதுவிஷயத்தில் ஏதோ அவர் ஒரு தென்னாட்டுப்பிராமணர் என்பதுமட்டில் தெரிவதாகச் சொல்லுகின்றார்கள். அவர்கள் ஸ்ரீசங்கராசாரியர் காலத்திற்குப் பிந்தினவர்களே. யாங்ஙனம் எனில், ஆசாரியசுவாமிகள் வித்தியாப்பியாசஞ் செய்யும்பொழுது அவர்கள் வியாகரணத்தில் மும்முனிகளின் முதுமொழிகளையே படித்தாரென்று அவ்வாசிரியர் சரித்திரத்தையெழுதினோர் சொல்லுகின்றார்கள். அதே விருத்திக்கு அதிகம்பீரமான சொற்களையமைத்து அதற்குரையொன்று ஸ்ரீஹரதத்தசுவாமிகளாற்செய்யப்பட்டது. அவரெழுதியகிரந்தத்தை முக்கியமாய்த்தோத்திரம்செய்பவரநேகர். அதிற் கண்டவிஷயங்களைக் கண்டிப்பவர் ஆசிரியர் பட்டோஜியர். அப்புத்தகத்தின்பெயர் பதமஞ்சரி. அஃதையியற்றிய ஹரதத்தர் என்பவர உத்தரதேசங்களிற் மிதிலையினருகில் பிறந்தமைதிலகௌடப்பிராமணர். ஆதலாற்றான் அவரை "ஹரதத்தமிச்சிரர்,, என்பது வழக்கம். ("மிச்சிரர்,, என்னுஞ்சொல் மைதில கௌடர்களுற்றது) இச்சங்கதியறியாதசிலர் "தென்னாட்டிற்பிறந்துசைவசித்தாந்தஸ்தாபகராய் விளங்கிய ஸுதர்சனசாரியரோ இவர் என்பார். அவர்களும் அநேக வேத வேதாந்தங்களையறிந்து "சுருதிஸூக்திமாலிகை, ஸாம்பஸ்துதி, கங்காதரஸ்துதி, ஆபஸ்தம்பகிருக்ய சூத்திர வியாக்கியானமுதலியவைகளைச் செய்தருளினர். அவருக்குச்சிவபிரானிட்டதிருநாமம் "ஹரதத்த,, ரென்பது. இப்பெயர் விளங்குபொருட்டுஅவருக்குத்தகப்பனரிட்டபெயர் அவ்வளவுவழங்கவில்லை. விசாரிக்குங்கால் ஸ்ரீகண்டமுனிவரியற்றிய பிரமசூத்திரபாஷிய வார்த்திகம் செய்த ஹரதத்தரொருவர். அவரிருந்தது சங்கராசாரிய சுவாமிகள் காலமாதலாற்றான் ஸ்ரீசோசர்ணத்தில் ஆசாரியசுவாமிகள் அவர்களைச்சந்தித்ததாக அவ்வாசிரியர் சரித்திரங்கூறுகின்றது. மற்றைய ஹரதத்தமிச்சிரரோ கௌடப்பிராமணர். பதமஞ்சரீ என்னும் கிரந்தமெழுதியவர் சுதர்சன ஹரதத்தாசாரியர் அதிசமீ காலத்திற்பிறந்தவராதலாற்றான் அவர்சரித்திரத்தில் "மத்துவாசாரியர் இராமானுஜாசாரியர் இவர்கள்கொண்ட வாதத்தை மறுத்தனென்று சொல்லப்படுகிறது. ஆகையால், ஹரதத்தாசாரியர்கள் மூவர்கள். ஹரதத்த மிச்சிரரெழுதிய பதமஞ்சரி வெகுகடினமாகையால் அதைச்சீடர்களுக்கு போதிக்காது அக்காலத்தறிஞர்கள் விட்டுவந்தார்கள். ஆசிரியர் பட்டோஜியர் அப்புத்தகத்தைப்பற்றியஅபிப்பிராயமிது: "மாபாடியமோதினும இப்பதமஞ்சரி பயன்படாது,, என்பது. ஏனெனில், இப்பதமஞ்சரியில் அநேகமாய் மாபாடிய வாக்கியங்களிருப்பதால் மாபாடியம்படித்தவனுக்கு உபயோகப்படுவதில்லை. அதைப்படித்தவர்க்கு அதிற்காணுஞ்சங்கதியில் ஒன்றுமின்மையால் அவரதை லட்சியம் செய்யமாட்டார்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ததுமானதாக வேற்பட்டது. சிற்சிலநன்மக்கள் யாம்காணக்கூடியபயன்களைப் பெற்றென. காணக்கூடியபயன் எனில், இவ்வுலகத்தின்கண் இத்தேகவுடலிலனுபவிக்கப்பாலது. காணக்கூடாப்பயனெனில், நாலாவாய்ச்சியனும் நுபவிகொனும்பதுவுலகங்களினும் அறுபிறப்புகளினும் பெறத்தக்கன. இனி உதயகாலாசாரங்களைக் கூறுவாம்.

இரவு இருபத்தைந்துநாழிகை சென்றபின்னர் நித்திரை செய்தல் கூடா. அக்காலத்திற்குச் சந்தியாகாலமெனப்பெயர். அக்காலத்தில் நித்திரைமுதலியவையை அனுட்டித்தால் நமக்குண்டாகும் தீப்பயனைப்பற்றி ப்ருகன் மனு கமதபிப்பிராயத்தைக் கீழ்வருமாறு வெளியிடுகின்றார்: "சந்தியாகாலத்தில் நித்திரையால் தௌர்ப்பாக்கியமும், படித்தலால் ஆயுட்குறைவும், அன்னமருந்தலால் வியாதியும், சையோகத்தால் கர்ப்பத்திற்கழிவுமுண்டாம்" என்று. அதலால் ஆக்காலத்திலுறங்காது விழித்திருக்கவேண்டுமென் றேற்பட்டது. இவ்விழித்தலென்னுமாசாரம் யாம் காணக்கூடியபயன்களை இயக்குயுவதால் இஃது திருட்டபலமெனவேற்படும். "விடியற்காலத்தில் தேவதைகளும், பிதிருக்களுமொன்றுசேருவார்களாதலால், அக்காலம்விழித்திருத்தல் பிதிருதேவதைகளைக் கனப்படுத்தலாகும்" என்பதால், அக்காலம் யாம் காணக்கூடாத (பிதிருக்களைக் கனப்படுத்தல்) பயன அக்கன்மத்திற்கு வெளியாவதால் அது அதிர்ட்டபலமெனக்கூறப்படும். ஆயின் இக்கன்மமிருவகைப் பயனுமுடைத்து. இனி ஆயுள்வேதத்தையறிந்தோர் அக்காலத்தில்விழித்திருத்தல அனலபித்தமென்னுமோர்வகைப் பித்தத்தை அழிக்கும்வழி எனச் சாதிக்கின்றார். அக்காலத்தில் வாளாவிழித்திருக்காது கடவுளைக் கருத்திலிருத்தி இல்லற நற்பொருட்களைப்பற்றிச் சிந்தித்தல்வேண்டும். அஃதே தருமசாஸ்திரங்களின்கருத்து. "இராக்காலத்தை ஆறுபகுத்து அதின்கடைப்பகுதியில் தமது இல்லறத்துணைவியுடன் விழித்துக் கடவுளைத்துதித்துத் தருமார்த்தங்களைச் சிந்திக்கவேண்டுவது" என்றறிக. விழித்தவுடன் நல்லறிவுடைய அந்தணர்களையேனும், அல்லது கற்புடைய மங்கையரையேனும், பசுக்களையேனும், வேறெந்த மங்கள பதார்த்தத்தையேனும் பார்த்தல் வேண்டும். கற்புநிலைமை கடந்தவர்களையும், ஏனைய எவ்விதப்பாவிகளையும் நிர்வாணிகளையும், அங்கவீனர்களையும் பார்த்தல் கூடா. (நிர்வாணிகளென்றால் குழவிகள் நிர்வாணிகளல்லர்; அவர்களைக்காண்டலும் குற்றமல்ல. ஏழாவது வயதுமுதல் உடைகளைத்தரிக்கவேண்டுமாறு உபநயனத்திலோர் அங்கமேற்பட்டிருப்பதால் அக்காலத்திற்குப் பின்னரோ அவர்களுக்கு உடை அவசியமெனக்கொள்க.) எழுந்தபிறகு கிழக்குத்திசையேனும், வடதிசையேனும் நோக்கிச் சிறிதுதூரம் செல்லல்வேண்டும். அத்திசைகளில் பூர்ணமான தடாக முதலியவை இராவிடில் அவையிருக்குந் திசைநோக்கிச்செல்லுதலவசியம்; பகலில் வீடுகளுள்ளிருக்குமிடத்தைத் தூரத்திலொதுக்கித் தன்சரீரவியாபாரங்களை நடத்திக்கொள்ளலவேண்டும். காய்ந்த புல்படிந்த மண்தரைகளில் சந்தியாகாலங்களிலும், பகற்காலங்களிலும் வடக்குநோக்கியும், இரவில் தெற்குநோக்கியும் தேகபாதையை நிவர்த்திசெய்துகொள்ளல்வேண்டும். இவ்விதி ஆபத்துக்காலத்திற்குஉற்றதல்ல; ஆபத்துக்காலத்தில எத்திசை நோக்கியேனுமிருத்தல் குற்றமாகா. வஸ்திரத்தால் நாசி, வாய், சிரசு இவைகளைச் சுற்றிமூடிக்கொண்டு தேகத்திலு மூடக்கூடியபாகங்களை அங்ஙனமே செய்துகொண்டு அக்னி, சூரியன், சந்திரன், பசு, தானியம், சந்தியை (அதாவது காலையில்கிழக்குத்திசையும், மாலையில் மேற்றிசையுமென்பது கருத்து) தீர்த்தம் (அதாவது குளமுதலியவை) ஸ்ரீகள், தேவாலயங்கள், காற்று, அந்தணர் இவர்களுக் கெதிர்முகமாயுட்காராது, தமது பூணூலைத்தாவடமாகத் தரித்து மலசலங்கழித்தல்வேண்டும். இதற்குத்தகாதவிடங்கள்:— உழுதநிலம், தடாக முதலிய ஜலம், மலை, தேவாலயம், புற்று, ஆற்றங்கரை, தேவாலயங்களுக்கருகாமை, பிராணிகள் நிறைந்தபள்ளம் ஆகிய இவைகளே

[illegible]

பிருகுவம்சம்

ருரு மகரிஷி சரித்திரம்.

(தொடர்பு.)

தான் முன் "ஸிஹஸ்ராபாசன்" என்னும் ஓர்ரிஷிக்குப் புத்திரனென்றும், தான் பிள்ளைப்பருவத்தில் தனது சமீபத்திலிருந்த ஓர் மகரிஷி அக்கினிஹோத்திரத்தில் ஓர் பாம்பைப் புல்லாலமைத்திட்டு அவரைப் பயமுறுத்தினேன். அவர் மூர்ச்சையடைந்து தெளிந்தெழுந்து உடனே என்னைநோக்கி "நீ பாம்பாகக்கடவாய்" என்று சபிக்க, அவர்சாபத்தால் பாம்பாயினேன்; பிறகு அவரைப் பணிந்து மன்னிக்கக் கேட்டுக்கொண்டதற்கு, "எக்காலம் பிரமதி மகரிஷியின் குமாரர் ஸ்ரீருரு மகரிஷியைப்பார்ப்பாயோ அப்பொழுதே சாபம் விலகும்" என மனமகிழ்ந்தருளினர். யான் இப்பொழுது தாமே அம்மகானென்றறிகின்றேன்; ஆகையால் என் சாபம் தொலைகின்றது; இஃதோ எனது முன் சரீரத்தை அடைகின்றேன்" என்று சொல்லியவுடனே திவ்யபிராமணவடிவங்கொண்டு "ஓ மகரிஷியே! பிராமணன் என்றும் சாந்தன்" என்று வேதங்கள் ஓதுகின்றமையால் நமரவருக்குச்சாந்தியே குலதருமம்; ஆகலின் நீர் இனிப் பிராணிகளை இமிசித்தலை விட்டுவிடும். பிறரை இமிசித்தல் க்ஷத்திரியருக்குரியது. நீர், ஆஸ்திகமகாரிஷி, ஜனமேஜயன் செய்த சர்ப்பயாகத்தில்வந்து சர்ப்பங்களைக் கொல்லாமற்றடுத்ததை அறிந்திலீரோ? என்றவளவில், ருரு அஃதெவ்விதம் அறியேன் சொல்லவேண்டும்" என்று வேண்ட, "அந்தணர்களுரைக்கக் கேட்பீர்" என்று சொல்லி உடனே மறைந்தார். உடனே ருரு எங்குந்தேடியும் அகப்படாமையால் மூர்ச்சையடைந்து தெளிந்து உடனே அவர்சொல்லிய "அந்தணர்களுரைக்கக் கேட்பீர்" என்னுஞ் சொல்லைப்பற்றித் தமது தந்தையிடம் சொல்ல, அவர் அம்மகரிஷியின் கதையைச்சொல்லி ஓர்வகையாய் இவருக்குத் திருப்திசெய்வித்தார். பிறகு ருரு பெருந்தவம் புரிந்தார். ஆகலால் ஆரியர்களறியவேண்டுவதி யாதெனில், சிவாகமங்கள் ரௌரவமெனப் பெயர்கொண்ட ஆகமம் இவராற்றான் வெளியிடப்பட்டதென்பதே. சிவபுராணம் வாயு சங்கிதை உத்தரபாகம் ஆகமப்பிரமாணத்தில் ருரு, ததீசி, அகத்தியர், உபமன்னியு ஆகிய இந்நால்வரே சிவாகமங்களாகிய காமிகமுதலிய இருபத்தெட்டாகமங்களையும் வெளியிட்டவர்களெனக் கூறப்பட்டிருக்கிறது. இந்நால்வருள் ருரு என்பவர் யாமுற்கூறிய சரித்திரத்திற் குடையவரே. ஏனெனில், பிறிதொருவிடத்து இவ்வாகமங்களில வெளியிட்ட ருரு என்னும் மகரிஷியைப்பற்றிச் சொல்லுமிடத்து, "பிருகுவம்சத்திற்பிறந்த ருரு" எனவிருக்கின்றது. ஆதலாற்றான் சுத்தமதத்தைச்சார்ந்தவொருவர் சௌந்தரியலகரியின் வியாக்கியானத்தில் "வதேஷ்டாதசம்தந்த்ரம்:" என்கிற சுலோகத்தின் வியாக்கியானத்தில் ரௌரவாகமத்தில் சிவஞானபோதத்திலுள்ள வசனங்களைப் பார்க்க சங்கிதாவசனமென்றார். இனி அனேகசிவாகமங்களிருப்பினும், சிவஞானபோதமென்னும் திவ்விய சைவசித்தாந்த சாஸ்திரம் அமைந்தது இவ்வாகமமேயாதலால் இஃது மிகச்சிறப்புடைத்தென்பது சைவர்கள் கோட்பாடு; ருருவென்னு மிவ்வாசாரியர் குறுமுனி முதலியவர்களைப்போல் சைவர்களுக்குள் ஓர் பரமாசாரியரே. பிருகு மகரிஷியின் வம்சத்திற் பிறந்த பெரும்பாணையோர்கள் சாம்பவர்களென்றே தெரியவருகிறது; அஃது பின்வரும்.

ஆரியாசாரங்கள்.

ஐயா, யாம் ஸ்ரீலக்ஷ்மிபிராட்டியாரது சரணங்களைக்கருத்திலிருத்தி அவரது ஆஞ்ஞாவாக்கியங்களாகிய வேதங்களிலும், தர்மசாஸ்திரங்களிலும் கண்டபடி ஆரியர்களின் நித்தியக்கிரியாதர்மங்களைப்பற்றிச் சிறிது எழுதப்புகுவாம்.

சில கன்மங்களுக்குப் பயன் யாம்காணக் கூடியதும், கூட

[illegible]

பாலநீதி

(முன்தொடர்ச்சி)

(௩௨) சேர்க்கைசேருமுன் தீர்க்கசோதனைசெய்.
(௩௩) சொத்தைகாட்டிலும் வித்தைவிசேஷம்.
(௩௪) சோதனைபலத்தால் நீதிவிளங்கும்.
(௩௫) சௌந்தரியத்திலுஞ் சாந்தமேசலாக்கியம்.
(௩௬) ஞானவழியை ஞாபகத்தேவை.
(௩௭) தஞ்சமென்றோர்க்குச் சஞ்சலம்போக்கு.
(௩௮) தாகமென்றோர்க்குத் தளையைப்போக்கு.
(௩௯) திறமையுடையார் சிரமமடையார்.
(௪௰) தீயர்சேர்க்கை தீயிலுங்கொடுமை.
(௪௧) துர்க்குணச்சகிப்பு சற்குணச்சிறப்பு.
(௪௨) தூண்டிவிடுபவன் நீண்டுவருந்துவன்.
(௪௩) தெளிவாய்ச்சற்றுத் தேவனைப்போற்று.
(௪௪) தேவதூஷணைசெயிற் பாவமோசனமில்லை.
(௪௫) தையலுக்கழகு தையல்கற்றது.
(௪௬) தொகுத்தறிவதிலும் வகுத்தறிவதுநலம்.
(௪௭) தோழனிலைமையைத் தனபதிக்கறி.
(௪௮) நல்லவழியேநட கல்விபயன்பட.
(௪௯) நாயிலுங்கடையன் தாயைப்பழிப்பவன்.
(௫௰) நிதியைக்காட்டிலும் மதியேமேலாம்.
(௫௧) நீதிகெடுப்பவன் துர்க்கதியடைவன்.
(௫௨) நுணுக்கமாய்ப்பார்த்து இணக்கப்படுத்து.
(௫௩) நூலறிவுபெறச் சீலஞ்சிறக்கும்.
(௫௪) நெறிதவிர்த்தநடை வெறிபிடித்தநடை.
(௫௫) நேசத்தோம்பேறவர் சாதுசேர்ந்தவர்.
[௫௬] நொண்டிகுருடனைக்கண்டுநகையேல்.
[௫௭] நோக்கமறிந்து நுவல்வதுநன்று.
[௫௮] பரத்தையர்நேசம் பிராணமோசம்.
[௫௯] பாலிய வயதிற் பழக்குநல்வழியில்.
[௬௰] பிராணிஹிம்சையால் திராணிசெலுத்தேல்.
[௬௧] பீதியுடையார் நீதியுடையார்.
[௬௨] புறணிபேசுதல் புத்திக்குறைச்சல்.
[௬௩] பூசித்துப்பரனை புசிக்குமுன்னேநினை.
[௬௪] பெரியோர்வணக்கம் பெருமைமார்க்கம்.
[௬௫] பேசிப்பழகுப் பிசகைப்போக்கு.
[௬௬] பயித்தியனவன் பயனறியாதவன்.
[௬௭] பொதுவானதும் பொறுப்புடன்பாரு.

விளம்பரம்.

இப்பொழுது மூன்றுவருடகாலங்களாக நடைபெற்றுவரும் நமது ப்ரம்மவித்தியாவானது கிரந்தலிபியிலும், தமிழிலும் பிரசுரஞ்செய்யப்பட்டுவருவதினால் தெலுங்கு தேசத்திலுள்ள அநேகசந்தாதார்களுக்கு உபயோகப்படாதுபற்றி, 300-கையொப்பங்கள் சேர்ந்தவுடன் தெலுங்குலிபியிலும் இதே விஷயங்கள் பிரசுரஞ்செய்யத் துவக்கப்படும். ஆகையால் அக்கிரந்தினை வேண்டுவோர் சென்னை 255. கெ. முத்தியாலுபேட்டை, தம்புசெட்டி தெரு, ம-ள-ள ஸ்ரீ வை. இரத்தினசெட்டியாரவர்களிடத்திலும் அடியிற்கண்டவரிடத்திலும் பணங்கட்டிரசீதுபெற்றுக் கொள்ளலாம்.

சந்தாவிவரம்-

வருஷம்-1-க்கு	3	0	0.
6-மாதத்திற்கு	1	12	0.
3-மாதத்திற்கு	1	0	0.

கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி
ப்ரம்மவித்தியாபத்திராதிபர்
சிதம்பரம்.

வாயுநீதி:

[illegible]

௩௨- [illegible]
௩௩- [illegible]
௩௪- [illegible]
௩௫- [illegible]
௩௬- [illegible]
௩௭- [illegible]
௩௮- [illegible]
௩௯- [illegible]
௪௦- [illegible]
௪௧- [illegible]
௪௨- [illegible]
௪௩- [illegible]
௪௪- [illegible]
௪௫- [illegible]
௪௬- [illegible]
௪௭- [illegible]
௪௮- [illegible]
௪௯- [illegible]
௫௦- [illegible]
௫௧- [illegible]
௫௨- [illegible]
௫௩- [illegible]
௫௪- [illegible]
௫௫- [illegible]
௫௬- [illegible]
௫௭- [illegible]
௫௮- [illegible]
௫௯- [illegible]
௬௦- [illegible]
௬௧- [illegible]
௬௨- [illegible]
௬௩- [illegible]
௬௪- [illegible]
௬௫- [illegible]
௬௬- [illegible]
௬௭- [illegible]

[illegible]

விளம்பரம்.

"ஸம்ஸ்கிருதபாஷா சுபோதினி,,

எத்தேசங்களிலுமுள்ள எல்லாப் பாஷைகளைக் காட்டிலும் ஸம்ஸ்கிருத பாஷையானது முதன்மை பெற்றதென்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாஷையிற்றான் நமக்கு இன்றியமையாத அரியவிஷயங்களுள்ளன. இஃதைக் கற்பிக்கின்றவர்கள் எவ்வளவு அரிதாயிருக்கிறார்களோ, அங்ஙனமே அஃதை யறிந்தவர்களும் அருமையாயினர். ஆகையால், இருளடர்ந்த மேகக்கூட்டத்தில் மிக அரிதாய் மின்னல் மின்னுவதுபோல, இப்பாஷையானது எவ்விடத்திலோ அற்பமாக விளங்கிவருகின்றது. இத்தமிழ்நாட்டில் அது விசேஷமாய் விர்த்திபடையவில்லை. ஆனால் தெய்வச்செயலால் இப்பொழுது சிறவருடைய விருத்திக்காக சில சம்ஸ்கிருதபாடசாலைகளுண்டாயிருக்கின்றன. இப்பாஷையைக் கற்ற அபல்தேசத்தவரைப்பார்த்து நம்மவர்களுக்கும் அதில் வாஞ்சையுண்டாயிருக்கின்றது. இப்பாஷையாலனேக வியாக்கியான கிரந்தங்களுள. அப்படியிருந்தும், தமிழ்கற்றவர்களாயிருக்கின்றவர்கள் பிறருதவியன்றி சுலபமாக இப்பாஷையைக் கற்கமுடியவில்லை. ஆகையால் ஷை கிரந்தங்கள் தமிழில் பதப்பொருளுடன் கூடியிருக்கவேண்டியது அத்தியாவசியமெனக்கருதி, ஸம்ஸ்கிருதபாஷையைப் போதிப்பதில மிக சமர்த்தரான, செருகளத்தூர் ப்ரம்மஸ்ரீ இராமசுவாமிசாஸ்திரிகளவர்களால் துவக்கப்பட்டுள்ள "பாலஸம்போதிகா" பாலசத்குருபோதிக,, என்கிற கிரந்தமானது தமிழில் பதவுரையுடன் சில வருடங்களுக்கு முன்னா பிரசுரஞ்செய்யப்பட்டது. இப்பொழுது அவருடைய அனுமதியினால் அவருடைய சகோதரராகிய ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளாலும், திருத்தராப்பூண்டி டி. மு. கோர்ட்டுவைக்கில் நாகேசுவரய்யரவர்களாலும், தமிழில் பதப்பொருள் சகிதமாயும், எங்கும்யாவர்கதும் உபயோகப்படும் பொருட்டு ஸமாவாலங்கார வியாகரண விஷயங்களால் சேர்க்கப்பட்டு ',ஸம்ஸ்க்ருதபாஷாஸம்போதினி,, ஸம்ஸ்கிருதபாஷாசுபோதினி" என்னுமகுடத்தின்கீழ் 40-பக்கங்களடங்கிய ஓர்சஞ்சிகையாக மாதமொருமுறை வெளிப்படுத்தப்படும்.

பத்திரிகையின் கிரயம்.

வருடமொன்றுக்கு முன்பணமாக தபால்கூலியுள்பட

ரூ-1க்கு	4	0	0.
6-மீ-க்கு	2	2	0.
3-மீ-க்கு	1	4	0.
காப்பி1-இ	0	8	0.

இஃது, 150-சந்தாதாரர்கள் சேர்ந்தவுடனே பிரசுரஞ்செய்யத்துவக்கப்படும். இஃதை வாங்க விரும்புவோர் ஜனவரிமாதம் 31-வக்குள்ளாக அடியிற்கண்ட விலாசத்திற்கு காலணா கார்ட்டின் வாயிலாகத தங்கள்பேரைத் தெரிவித்து ரிஜிஸ்டர்செய்துகொள்ளவேண்டும். மேற்கண்ட 150-சந்தாதாரர்கள் சேர்ந்தவுடன் இதன்விபரம் ப்ரம்மவித்திய வாயிலாக அறிவிக்கப்படும். உடனே பணம் அனுப்டலாம்.

நாகேசுவரஐயர்
ப்ளீடர்
திருத்தராப்பூண்டி.

ஸ்ரீவில்லிபுத்தூரில் அத்தியயனஉற்சவம்

ஐயா, இவ்வூரிலிருக்கும் நாச்சியார்கோவிலானது தென்கலைக்கோவிலென்றும், ஓர் தென்கலை தர்மகர்த்தருடைய ஆளுகையிலிருக்கிறதென்றும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே. சென்றடிசம்பர்மீ 4வ யில் துவக்கவேண்டிய பகல் பத்து அத்தியயனஉற்சவத்தில தென்கலையார் பிள்ளைலோகாசாரியரென்ற ஓர்விக்கிரகத்தை எழுந்தருளப்பண்ணுவது கூடாதென்று ஸ்தலம் டிப்டிகலெக்டரவர்களிடம் வடகலையார் மனுக்கொடுத்தனர். பிறகு அவர்கள் கோவில் தர்மகர்த்தரை விசாரித்ததில் பிள்ளைலோகாசாரியர் விக்கிரகம் வெகுநாளாயிருப்பதாகவும், தானவழக்கத்திற்குவிரோதமாய் ஒன்றும் செய்வதாக உத்தேசிக்கவில்லையென்றும் சொன்னார்கள். அன்றியும், அவர்கள் இ. பி. கோர்ட்டு 150 வதுபிரிவுப்படிக் கலகஞ்செய்கிறவர்களைத் தண்டிக்கப்போவதாக நோட்டீசு பிறப்பித்தனர்கள். ஆழ்வாராசாரியசுவாமிகளன்னியில் ஆண்டாளை எழுந்தருளப்பண்ணிக்கொள்ளுகிறதென்ற விஷயமாய் கி. பு. கோர்டு 147-வதுபிரிவுப்படி ஓர்உத்திரவும் பிறப்பித்தார்கள். ஆயின் அத்தியயனஉற்சவம் ஆழ்வார் ஆசாரியாளுக்கே முக்கியமாய் ஏற்படுத்தப்பட்டிருப்பதாலும், அவர்களன்னியில் உற்சவம் நடத்துவது சாத்தியபடாதென்றும் தர்மகர்த்தர் டிப்டிமாஜிஸ்திரேட்டாரவர்கள் உத்திரவுப்படி உற்சவத்தை நிறுத்திவிட்டார். உபயகட்சிக்காரர்களை வருவித்துவிசாரித்ததுடன் உற்சவத்தை நிறுத்திவிடலாமா? பகல் பத்துஉற்சவத்தை மாலை 6. மணிக்குள்முடித்துவிடலாமா? விவாதப்பட்ட விக்கிரகாதிகளாகிய பிள்ளைலோகாசாரியர், வேதாந்ததேசிகர் இவர்களன்னியில் உற்சவத்தைநடத்தலாமா? என்ற மூன்று வினாக்களடங்கிய மற்றொரு உத்திரவையும் பிறப்பித்தனர்கள். உபய கட்சிக்காரர்களும் அவரவர்களுக்குச் சாதகமானபடி மறுமொழிசெய்தனர். மாஜிஸ்திரேட்டாரவர்கள் முடிவான பைசல் செய்யாததினிமித்தம் உற்சவம் நிறுத்தப்பட்டது. தென்கலையார் மற்றஆழ்வார்களுடன் பிள்ளைலோகாசாரியர் எழுந்தருளவேணுமென்றும், வேதாந்ததேசிகருக்குத் தென்கலைத்திருமண் சாத்துவதுதான் மாமூலென்றும் சொல்லுகிறார்கள். மேற்கண்ட 3-வினாவை அனுசரித்து நடத்துவது உத்தமமென்று சொன்ன திருநெல்வேலி விஷ்ணுமத கமிட்டியாரவர்களுடைய பைசலையனுசரித்து அதன்படி உற்சவத்தை நடத்துகிறதென்று சென்ற டிசம்பர்மீ 6-வ சாயுங்காலம் டிப்டி மாஜிஸ்திரேட்டாரவர்கள் உத்திரவு செய்தார்கள். அவ்விதம் நடத்த ஆண்டாளைக் கீழக்கோவிலுக்கு எழுந்தருளச்செய்ததில வடகலையார் தாங்கள் ஓர் புதிதானபாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டுவேதோபல மந்திரத்தைத் தாங்களும் ஷை தென்கலைக்கோவிலில்சொல்ல எத்தனித்தார்கள். ஆனால் ஷை அதிகாரி இன்னார்தான் இன்னமந்திரத்தைச் சொல்லுகிற கிரமமென்று அறியக்கூடாமையால் அவரவர்களை இஷ்டப்பிரகாரம் மந்திரத்தைச் சொல்லிக்கொள்ளலாம்; ஆனால் ஒருவரும் கலகஞ்செய்யக்கூடாதென்றுமட்டும் பெச்சரித்தனர். கலகஞ்செய்யக்கூடியவர்களை உள்ளே விடாமலிருக்கும்படி தர்மகர்த்தா போலீசார் உதவவேணுமென்றுகேட்டதற்கு, அவ்வளவுக்குத் தான் உதவிசெய்யக்கூடாதென்று சொல்லிவிட்டார்கள். இதுவிஷயத்தைக் கமிட்டியாரவர்களுக்குத் தர்மகர்த்தா தெரிவித்ததில், அவர்கள் தென்கலைக் கோவிலில் சொல்லுகிறபடி "ஸ்ரீசைலேச தயாபாத்திரம்" என்றமந்திரத்தைத் தென்கலையார் சொல்லுகிற வழக்கமென்றும், அதற்கு அன்னியதா ஒன்றும் நேரிடாமலிருக்கும்படி உத்தியோகஸ்தர்கள் உதவியைத் தேடிக்கொள்ளவேணுமென்றும் தர்மகர்த்தாவுக்குத் தந்திபேசினார்கள். மேலேசொன்ன டிப்டிகலெக்டரவர்கள் உத்திரவுக்கு நகல், தர்மகர்த்தாவுக்கு டிசம்பர்மீ 13-வ கிடைத்தபடியால அன்றுவரை உற்சவம் நிறுத்தப்பட்டிருந்தது. கோவில்வாசலில் சேவகர்களைவைத்துக் கலகஞ்செய்யக்கூடிய உபயகலையாரையும் உள்ளேவிடாமல் உற்சவம் நடந்தது. ஆனால் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி உற்சவத்தன்று ஸ்தலம் தாசில்தார் சிலவடகலையாருடன் தர்மகர்த்தர் உத்திரவுக்கு விரோதமாய் உள்ளே பிரவேசித்ததாய் கோவில் வாசல்காரனாகிய ஆழ்வான்பிள்ளை யென்பவன் நமது வடகலைத்தாசில்தாரவர்களைச்சேர்த்துப் பிரியாது கொடுத்திருப்பதைத்தவிர மற்றவைகளெல்லாம் சரியாய்நடந்தது. ஜனவரிமீ 6-வ-யாகிய சென்ற சனிக்கிழமை ஆரம்பித்த மார்கழிமீ உற்சவத்தில தென்கலையார் கிரமப்படி தங்கள்மந்திரத்தைச் சொல்லும்பொழுது வடகலையார் தங்கள் மந்திரத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் கலகமில்லாமல்போனது யார்செய்தபுண்ணியமோ தெரியவில்லை. கமிட்டியார்களும் இவ்விடம்வந்து உபயகலையாரையும் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். மதவிஷயமான சங்கதிக்கு அவர்களே நியாயாதிபதிகளாயிருப்பதால வழக்கம் முதலானதையறிந்து நியாயமான பைசல்செய்வார்களென்றெண்ணுகிறோம். டிப்டிமாஜிஸ்திரேட்டாரவர்கள் முதலில் தர்மகர்த்தருக்குப் போலீசுதார் உதவிசெய்யத் தவறிப்போனபோதிலும் கலகமன்னியில் உற்சவத்தை நடத்த முன்னமே வேண்டிய ஏற்பாடுகள் செய்த அந்த உத்தியோகஸ்தருக்கும் தர்மகர்த்தர் ரொம்பவும் நன்மையை விரும்பவேண்டும். பிள்ளைலோகாசாரியாரை எழுந்தருளப்பண்ணுவதினால் என்னதோஷமோ தெரியவில்லை. வேதாந்ததேசிகருக்கு எந்தத்திருமண்சாப்பு சாத்தினாலென்ன? யெல்லாம் ஒன்றே. "ஐக்கியம் அளவிறந்ததனம்" என்பதின்பலனை இவர்கள் எப்பொழுது அடைவார்களோ! நாம் ஒற்றுமையாய் வாழ்ந்தால் அன்னியமதத்தை வேரறுத்துத் துரத்திவிடலாம்; இல்லாவிட்டால் சண்டையிட்டுக்கொண்டிருந்த இரண்டு பூனைக்குட்டிகளைப்போல உளதையிழந்துவிட்டு அன்னியருக்கு யிடங்கொடுத்து மனவருத்தப்படுவோம். மதாபிமானிகளே! உள்மதசசண்டையை விடுங்கள்; ஒற்றுமைப்பட்டுவாழுங்கள்; தேசநன்மையைத் தேடுங்கள்; பரப்பிரம்மென்ற ஒன்றையே கைக்கொண்ட நம்முடையமதத்தை மேன்மைப்படுத்துங்கள்; நற்செய்கையைக் கைக்கொண்ட பக்ஷிராஜபாகிய மகான் நீடூழிவாழ்ந்திருக்கவேணுமென்று பிரார்த்திக்கின்ற

ஸ. சு. பா.

சென்னை காங்கிரெஸ் கமிட்டி ரிபோர்ட்டு.

சென்னை "காங்கிரேஸ் ரிசெப்ஷன் கமிட்டியார்" தங்களை ஏற்படுத்தியதுமுதல் செய்துவந்த வேலையையும், தாங்கள்செய்துவந்த முயற்சியின் பலனாகிய சென்னையில் கூடிய

மூன்றாவது காங்கிரெஸ் நடந்த விதத்தைப்பற்றித் தங்களுக்குண்டாகிய திருப்தியையும் இதுமூலமாய் தெரிவிக்கக்கோருகிறார்கள்.

1887-ஹு கல்கத்தாவில் நடந்த காங்கிரெஸில் "மூன்றாவது காங்கிரெஸ் சென்னையில் கூடவேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது.

இப்படி நடக்கும்படித் தீர்மானிக்கப்பட்ட காங்கிரெஸுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் "சென்னை மகாஜன சபையார்,, தாங்கள்செய்வதாய் ஒப்புக்கொண்டார்கள். அதன்பேரில் 1887-ஹு மேமீ 1.உயில் ராஜா ஸர் டி மாதவராவ் கே. ஸி. எஸ். ஐ., அவர்கள் சபாநாயகராக வீற்றிருக்க ஒருபொது மீட்டிங்கு கூடப்பட்டது. அந்த மீட்டிங்கில், மூன்றாவது காங்கிரெஸைச் சென்னையில் கூட்டுவதற்கு வேண்டிய யேற்பாடுகளை உடனே செய்யும்படிக்குத் தீர்மானிக்கப்பட்டு, ராஜா ஸர் டி. மாதவராயரைச் சேர்மனாக வைத்து ஒரு பெரிய கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அந்த ஜெனரல்கமிட்டியார் ஆகவேண்டிய காரியங்களை நடத்துவதற்றாக காரிய நிர்வாகசபையொன்று ம-ள-ள-ஸ்ரீ பி. சோமசுந்தரம்செட்டியாரைப் பிரஸிடெண்டாகவிருக்க ஏற்படுத்தினார்கள். அக்காலத்தில் மே-மீ முதல்தேதி முதல் ஜூலை-மீ ௩௧-உவரையில் ஜெனரல்கமிட்டியார் ரு-தடவை மீட்டிங்கு கூடினார்கள் அம்மீட்டிங்குகளில் காங்கிரெஸைப்பற்றி அனேக முக்கியமான அம்சங்கள் பிரஸ்தாபத்துக்குவந்து தீர்மானிக்கப்பட்டன. காரிய நிர்வாகசபையார் சுமார் உரு-தடவைக்குக்குறையாமல் கூடி, காங்கிரெஸுக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றியும்; ஆங்காங்கிருந்துவரும் பிரதிநிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்யப்படவேண்டிய அனேக சில்லரை ஏற்பாடுகளைப்பற்றியும் பிரஸ்தாபித்துத் தீர்மானத்திற்கு வந்தார்கள்.

முதல் முதல் கமிட்டியார் செய்த ஏற்பாடு யாதெனில்; காங்கிரஸ் செலவுக்குவேண்டிய பண்டு சேர்க்கவும், சாதாரண ஜனங்களுக்கு காங்கிரெஸ் சபையின் கருத்துகளையும் அதனால் உண்டாகும் பிரயோஜனத்தையும் தெளிவாகத்தெரியப்படுத்தவும், எல்லாப் பொதுசபைகளுக்கும எல்லா முக்கியமான பெரியமனுஷர்களுக்கும் காகிதம் எழுதினவையே. இந்தகமிட்டியார் ஜனங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து செய்யவேண்டிய ராஜாங்க விஷயமான இந்தக் காங்கிரெஸுக்குத் தங்களால் கூடியவரையிலும் தாங்களேசெய்த உபகாரத்திற்கு வெளியிடங்களிலிருக்கும் கமிட்டிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் இப்போது வந்தனமளிக்கிறார்கள். வெளியிலிருந்துவரும் பிரதிநிதிகள் தங்கும்படியாகத் தன்பங்களாக்களில் ஒன்றைக் கமிட்டியார்வசம் ஒப்புவித்ததற்காக முக்கியமாய் மிஸ்டர் ஹுமாயூன் ஜா பஹதூர் ஸி. ஐ. இ. அவர்களுக்கு வந்தனமளிக்கிறார்கள். சமயத்துக்குத் தக்கபடி கம்பீரமாகவும் சொகுசாகவும் இருக்கும்படிக்குத் தக்கஏற்பாடு செய்ததற்காகவும், அதிக ஊக்கத்துடனேயும் சுருசுருப்புடனேயும் வேலை செய்ததற்காகவும் அனேக பெரியமனுஷர்களுக்கும் வந்தனம்பண்ணுகிறார்கள்.

கமிட்டியார் கேட்டுக்கொண்டபடி 31-உ வரையிலும்நேர்ந்த வரவு செலவு கணக்கை டாக்டர் எஸ். பழனிஆண்டி, ம-ள-ள-ஸ்ரீ டி. கவபெருமாள்செட்டி ஆகிய இவர்கள் பரிசோதித்துப்பார்த்தார்கள். அக்கணக்கு விவரத்தை அவர்கள்பரிசோதித்துக் கணக்கடிபாவருமறியக வரைந்திருக்கிறார்கள். காங்கிரெஸ்வேலை இன்னும் செய்யவேண்டியிருப்பதினாலும் இந்தக் கமிட்டியின்மெம்பர்களில் அனேகர் சேர்ந்த காங்கிரெஸ கமிட்டியொன்று நிரந்தரமாக ஏற்பட்டிருப்பதினாலும் இந்தக்கமிட்டியார் தங்கள் கணக்கு புஸ்தகங்களை அவர்களிடத்தில் கொடுத்து இந்தக் காங்கிரெஸ்வெலையை அவர்கள் இவ்விராஜதானியில் மேல்நடத்தி வருவார்களென்று கோருகிறார்கள்.

1887-ஹு ஏப்ரல்மீ 1-உ முதல்
1888-ஹு ஜூலை-மீ 31-உ வரைக்கும்

இந்தியன் நாஷனல் காங்ரெஸ்
மொத்த வரவு செலவு ஜாபிதா.

வரவு ஜாபிதா.

	ரூ.	அ.	ப
அனந்தபுரம்	246	11	0
பெல்லாரி	1,739	1	0
செங்கற்பட்டு	1,353	4	0
கடப்பை	538	14	0
கோயமுத்தூர்	658	0	0
கெஞ்சம்	432	0	0
கோதாவரி	445	4	0
கிருஷ்ணா	360	7	0
கர்னூல்	682	1	1
சென்னபட்டணம்	6,881	12	8
மலையாளம்	710	0	0
மதுரை	666	0	0
நெல்லூர்	1,129	0	0
நீலகிரி	2	0	0
வடாற்காடு	1,483	8	0
தென்னாற்காடு	296	7	0
தென்கன்னடம்	190	0	0
சேலம்	638	12	0
தஞ்சவூர்	1 274	5	0
திரிச்கிராப்பள்ளி	355	4	0
திருநெல்வேலி	431	12	0
விசாகப்பட்டணம்	1 964	6	0
கொச்சி	600	0	0
மைசூர்	1,526	11	0
திருவாங்கூர்	665	0	0
வடஇந்தியா, பர்மா, மலாயாதேசங்கள்	1,511	0	0
காங்கிரெஸ் புத்தகங்கள் விற்றதிலும் வண்டிகுடிக்கூலி, தபால்சார்ஜ்முதலியவைகளில்	509	14	6
	27,291	6	3

செலவு ஜாபிதா

	ரூ.	அ.	ப.
தபால், தந்தி முதலானவைகள் ...	1,686	8	2
வேலைக்காரர்களும், கூலிக்காரர்களும்	635	4	10
சமையல்காரர்களுக்காக ...	341	0	0
சிப்பந்திச்செலவு	558	15	3
பங்களாமராமத்தும், குடிக்கூலியும்	1,138	9	4
கோட்டிகுகள் அச்சுக்கூலி ...	1,076	0	0

௩,வது காங்கிரஸ் ரிபோர்ட் அச்சுக்கூலி	2,364	12	2
சீமையில் அச்சிட்ட செலவுக்காக அனுப்பியது	1,000	0	0
நாறகாலி முதலான சாமான்கள்	2 250	0	0
பந்தல்போட்டதற்கு ...	2,000	0	0
ராம்தாஸ நாயுடு அவர்கள் மூலமாய் பந்தல்போட்டதற்கு	211	0	8
வண்டி சத்தம்	574	13	4
மெம்பர்மூலமாய் வண்டிகளுக்குகொடுத்தது	2,570	0	0
ஹோடல்கள்	1,796	10	0
மெம்பர்மூலமாய் சாமான்கள் முதலானவைகளுக்குக் கொடுத்தது	5,400	0	0
மெம்பர்மூலமாய் மகம்மதியர்களுக்கு சாமான் சர்பரா செலவு	446	9	2
சூபரிண்டெண்டெண்டு மூலமால் செலவு	400	0	0
கையிருப்பு சாமான்	218	0	0
டணிபார்டர்மூலமாய் அனுப்பியது	25	0	0
408-மெத்தை திப்பட்டி	272	0	0
வைத்தியச் செலவு	125	0	0
போலீஸ் செலவு	122	8	0
மரக்கறி பதார்த்தங்கள்	114	5	3
ஸோடாவாடர்	168	8	4
நாற்காலி கொண்டுவந்ததும், ரிபேர்செய்ததும்	94	1	4
குப்பைவண்டிகள்	208	6	0
மின்சார வெளிச்சம் போட்டதற்கு	226	3	2
வண்டி ரிபேர்செய்கிறவர்	75	0	0
ரிபோர்டர்களுக்கு	210	0	0
இரும்புகட்டில்களுக்கும், கூடாரங்களுக்கும்	128	3	0
பகதல் பிளானுக்கு	43	0	0
அழைப்புப் பத்திரங்களனுப்பியதில் செலவு	280	12	0
	26,761	2	0
மிகுதி கையிருப்பு	530	4	3
ஆகமொத்தம்	27,291	6	3

ப. அனந்தாசார்லு,
மு. வீரராகவாசாரியார்,
செக்ரிடெரிகள்.

"ஶ்ரீசிதம்பரப்ரஹ்மவித்யாப்ரசாரஸபாயாம்"
[illegible]

ஶ்ரீ [illegible] ஸஹிதா.	௦	௧	௦
ஶ்ரீ [illegible]	௦	௧	௦
ஶ்ரீ [illegible]			
ஶ்ரீ, ஶிவ[illegible]ஸஹித: ஶிவதத்த்வவிவேக:	௨	௦	௦
[illegible]	௦	௧௨	௦
ப்ரஹ்மதர்கஸ்தவ: ஸவ்யாக்யாநம் ச	௦	௮	௦
[illegible]	௦	௪	
ஶிவத்யாநபத்ததி: (மூலம்)	௦	௧	௦
ஶிவமஹிமகலிகாஸ்துதி: [illegible]	௦	௭	௦
ஶ்ரீ நாராயண [illegible]	௦	௨	௦
ஶ்ரீ [illegible]	௦	௨	௦
ஸித்தாந்தலேஶஸங்க்ரஹ: (மூலம்)	௧	௦	௦
ரத்நத்ரயபரீக்ஷா [illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
ஶிவகர்ணாம்ருதம்.	௦	௪	௦
[illegible] (மூலம்) [illegible]	௦	௩	௦
ஶ்ரீ [illegible]	௦	௦	[illegible]
ஶ்ரீ [illegible]	௦	௦	[illegible]
ஶ்ரீ [illegible]	௦	௦	[illegible]
ஶ்ரீ [illegible]	௦	௮	௦
[illegible] ஸஹ ஶ்ரீ நாராயணஶாஸ்த்ரி [illegible]	[illegible]	௫	௦
[illegible] நாடகம்	௦	[illegible]	௦
[illegible]	௦	[illegible]	௦
[illegible] (ஸவ்யாக்யா)	௦	[illegible]	[illegible]

தௌஶாரதிணகம். ப்ராக்ருதகவி)(			
விராவீதப்ரஹ்மவித்யாநாடகா)(	௦	க	௦
தாக்ஷ்யதம்)(			
ஶ்ரீராமோஹ்ரகவிக்ருதம்)(			
பதஞ்ஜலிஶேஷகாவ்யம்)(	௦	ரு	௦
ஶ்ருங்காரதிண்கலப்ரக்ருதகவிக்ருத)(			
மௌனிவித்யாஸம்வாதஹ்ருதயா)(			
தாக்ஷ்யதம். ஶ்ரீநிவாஸகவிக்ருத)(	௦	க	௦
ஸூக்த்யுஷ்கம்)(			
ஶ்ரீத்யாகராஜஸ்துதிஶதகம்)(			
ராஜராஜேஶ்வரீகவிப்ரணீத: ஶ்ரீ)(	௦	க	சா
விஶ்வதத்வஸாரஸம்க்ரஹ)(			
ப்ரபந்தய:)(			
வேங்கடேஶார்யக்ருதம் (தயாஶதகம்)	௦	க	௦
வேங்கடேஶார்யக்ருதா (ஸுபாஷிதி)	௦	௦	சா
வேங்கடேஶார்யக்ருதா (ஸ்தோத்ரிவஸதி:)	௦	க	சா
வேங்கடேஶார்யக்ருதம் ஸம்ஸ்க்ருதஶதகம்	௦	௦	சா

—ஸந்த்யாவந்தநக்ரந்தய:—

ஶ்ரீநரஸிம்ஹகோவிந்தஶர்ம ப்ரணீத: ஸம்ஸ்க்ருதபாஷா ப்ரபந்த: ஶ்ரீதத்வஜ்ஞாநாசார்யகவிக்ருதவ்யாக்யா ஸமேத (க்ரந்தலிபி:	௦	கூ	௦
ஸம்ஸ்க்ருதராஜாவார்யப்ரணீத)(			
ஶ்ரீராமேஶ்வரவிஜயம் சம்பூகா)(	௦	அ	௦
காவ்யம்(க்ரந்தலிபி: ((			
ஶிவநக்ஷத்ரமாலிகா (நாமாவலி:)	௦	௦	சா
ஶ்ரீக்ருஷ்ணஸ்வாமிதீக்ஷிதகவிக்ருதம்)(			
ப்ரஶ்நோத்தரராமாயணம்)(	௦	ரு	௦
சிதம்பரமாஹாத்ம்யம்(க்ரந்தலிபி:)	௦	க௦	௦
சிதம்பரமாஹாத்ம்யஸங்க்ரஹம்)(			
பதஞ்ஜலிஶிஷ்டகம் (க்ரந்தபாஷா)(	௦	க	சா
நாராயணப்ரஶ்நோத்தரம்(க்ரந்தபாஷா)	௦	௩	௦

ஶ்ரீமத்வ்யாஸப்ரயுக்த.

Bible Disector (English)	0	0	9
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணு 2.

ஆன்மரவும் சரீரமும்	,,	க	,,
இஃது காஸதிசர் கேழ்விக்கு விடை			
சகாதேவசாஸ்த்திரம்	,,	க	,,
நீதிக்கீர்த்தனை	,,	க	சா
சன்மார்க்கபோதனி	,,	,,	௩
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்புராணம்	,,	சா	,,
சந்தபுராணநவநீதம்	,,	கஉ	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
சிவனுந்தேவனுளன்னுந்திரு நாவுக்காப்பு	,,	,,	சா
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,,
சிவோத்கருஷதீபிகை	,,	க	,,
திருமுருகாற்றுப்படை பரிமேலழகருரையுடன்	,,	உ	,,
திருத்தணிகைபதிற்றுப்பத்தந்தாதி	,,	க	,,
சதாசிவரூபம்	,,	உ	,,
நெஞ்சுவிடுதூது	,,	,,	சா
உருத்திராக்கமாலை	,,	,,	சா
திருநாவுக்கரசர்திவ்யசரித்திரம்	,,	,,	௩
சிதம்பரசுதயுராணம்	1	0	0
சிவகர்ணாமிர்தம்	0	12	0
சதுர்வேததாற்பரியசங்கிரகம்	0	4	0
யேசுமதநிராகரணம்	0	4	0

விவேபோதனி

நே. க. உ. ௩. ச. ௫. சா. பிரதி 1.க்கு விலை பை மூன்று

விவேகசுந்தரம்

நெ. உ ௩ ச ௫ சா எ அ.

பிரதி 1-க்கு பை 0 0 3

கல்விக்களஞ்சியம் கடன்பட்டகந்தன்கதை	பை	ஆறு	
புருஷத்துவேஷபூதகிகதை	பை	ஆறு	
திருஞானசம்பந்தசுவாமிகள்சரித்திரம்	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம்	0	0	3
இந்துஜெயபேரிகை பிரதிஒன்றுக்கு விலை	0	0	3
ஜனோபகாரம்	,,	க	,,
வச்சிராடங்கம்	,,	,,	சா
வியாதிமூலங்கள்	,,	,,	௩

ஒருபைபுத்தகங்கள்.

சத்துருசகவாசம்நித்தியசங்கடம்
நன்மை நலந்தரும்
பேராசை பெருநஷ்டம்
அடாதுசெய்தோன் படாதுபடுவேன்
மனக்கவலைபலக்குறைச்சல்
துணபூஷணிசரித்திரம்
பாதிரிமார்ஸ்கூலில் பெண்களைஅனுப்பலாமா

Printed aud Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.